# DEPOSITION OF WITNESS
# (Chapter XXIII Code of Criminal Procedure)
# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
# S.T.C. No.1359/2022 P.W.2

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | பேச்சிமுத்து | க-பெ | முத்துராமன் |
| ஊர்: | : | ஜெயங்கொண்டான் | | |
| வயது: | : | 40/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | வீட்டுக்குடித்தனம் | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.04.2026

**எதிரிகள் ஆஜர்.**

--------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் ஜெயங்கொண்டானில் வசித்து வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். அசா 1 ஐ தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். கடந்த 21.08.2022 அன்று காலை 11.00 மணியளவில் நான் வீட்டில் இருந்தேன். அருகில் உள்ள வீட்டில் சத்தம் கேட்டது. அங்கு சென்று பார்த்தேன். அங்கு யாரும் இல்லை. அதன் பிறகு என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கு இணங்க சாட்சியை பிறழ்சாட்சியாக கருதக்கோரி அனுமதி அளிக்கப்பட்டது.**

அரசு தரப்பு குறுக்கு விசாரணை

போலீசார் விசாரணையில் கடந்த 21.08.2022 அன்று காலை 11.00 மணியளவில் அசா1 ன் வீட்டில் ஆஜர் எதிரிகள் அத்துமீறி உள்ளே நுழைந்து முன் விரோதத்தை மனதில் வைத்து அங்கிருந்த கதவு மற்றும் பாத்திரங்கள் மற்றும் இருசக்கர வாகனம் ஆகியவற்றை அடித்து சேதப்படுத்திய விபரம் தெரிந்து நேரடியாக அங்கு சென்று பார்த்து நடந்த விபரங்களை சொல்லிவிட்டு தற்போது வழக்கு விசாரணையில் உண்மை சம்பவத்தை மறைத்து பிறழ் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.04.10 17:20:51 +0530

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
S.T.C. No.1359/2022 P.W.1

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | ரூக்மணி | க-பெ | ஆனந்தன் |
| ஊர்: | : | ஜெயங்கொண்டான் | | |
| வயது: | : | 30/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | வீட்டுக்குடித்தனம் | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **09.04.2026**

**எதிரிகள் ஆஜர்.**

-------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் ஜெயங்கொண்டானில் வசித்து வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். கௌதம் மற்றும் கௌசிக் ஆகியோர் எனது உறவினர்கள். எனது கணவர் திருப்பூர் பனியன் கம்பெனியில் பணிபுரிந்து வருகிறார். எனக்கு ஜெகதீஸ்வரன் மற்றும் ஆதிநாதன் என்று இரண்டு குழந்தைகள் உள்ளனர். மருத்துவமனைக்கு பரிசோதனை செய்ய சென்றபோது 21.08.2022 அன்று நான் எனது குழந்தை ஆரியநாதன் என்பவரை மருத்துவமனைக்கு அழைத்து சென்று விட்டு மதியம் 12.00 மணியளவில் வந்து பார்த்தபோது எனது கொழுந்தனார் அரவிந்தன் என்பவருக்கும் ஆஜர் எதிரிகளான கௌதம் மற்றும் கௌசிக் ஆகியோர்களுக்கும் இருந்த முன் விரோதத்தை மனதில் வைத்து கொண்டு ஆஜர் எதிரிகள் அனைவரும் அத்துமீறி எங்கள் வீட்டிற்கு உள்ளே நுழைந்து கதவை உடைத்து அங்கு வீட்டில் இருந்த என்னுடைய இருசக்கர வாகனம் பதிவெண் TN 42 AA 3793 என்ற ZR வாகனத்தையும் எங்கள் வீட்டு கதவையும் பண்ட பாத்திரங்களையும் உடைத்து சேதப்படுத்தி இருந்தார்கள். இது குறித்து அருகில் உள்ளவர்களிடம் யார் இவ்வாறு செய்தார்கள் என்று கேட்டதற்கு பேச்சிமுத்து என்பவர் ஆஜர் எதிரிகள் தான் என்று சொன்னார்கள். மேற்படி சேதம் அடைந்த பொருட்களின் விலை மொத்தம் ரூ.50000/- இருக்கும்.

இது சம்பந்தமாக நான் சாக்கோட்டை காவல் நிலையம் சென்று நடந்த விபரங்களை சொல்லி நான் புகார் அளித்தேன். புகார் அசாஆ 1. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள். அவர்களிடம் நான் நடந்த விபரங்களை சொன்னேன்.

குறுக்கு விசாரணை

இல்லை

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.04.10 17:20:56 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.